




மா.க. ஈழவேந்தன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கை
நாடு கடந்த தமிழீழஅரச உறுப்பினர் (கனடா பேராளர்)

**M. K. EELAVENTHAN**
Former Member of Parliament Sri lanka
Member of Transnational govt of Tamil Eelam
Representing Canada

St Georges Manor
809-17 Brimley Road
Scarborough, ON, M1M 3T8
Canada

Tel:416 519 7165
Email: mkeelaventhan@gmail.com

# தமிழால் உலகாண்ட தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழா வெளியீடு



**தோற்றம்** 02.08.1913 — **மறைவு** 01.09.1980

## தமிழ் மண் காக்க ஓங்கி ஒலித்த தனிநாயக அடிகளின் தொலைநோக்குச் சிந்தனை

சென்ற சில திங்கள்களாக வடமாகாணம் கீழ்மாகாணங்களில் சொற்பொழிவுகள் ஆற்றியபொழுது நம் ஈழத் தமிழ் நாட்டின் பொருளியல் சமூக முன்னேற்றங்களைப்பற்றி அறிஞருடன் கலந்து உரையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. மேலும் வவுனியா தொடங்கி யானையிறவு ஈறாக இடையேயுள்ள நிலப்பரப்பின் எதிர்கால முன்னேற்றத்தையும் உணர்ந்தேன்.

கோயிலுஞ் சுனையும் உள்ள கடல் சூழ்ந்த திருமலையின் குடாவையும் பாறையையும் அதனைச்சுற்றியிருக்கும் நீர்ப்பரப்பு நிலப்பரப்பின் அழகையும் கண்டு வியந்தேன். கீழ் மாகாணத்தில் கடலுடன் கலக்குமுன் மாவலி கங்கையின் இரு மருங்கும் தன் சேயைப்போல் நீருட்டும் பச்சைக்கழனிகளைக் கண்டு மகிழ்ந்தேன். மட்டக்களப்பின் தென்பாகத்தில் காரை தீவு அக்கரைப்பற்று முதலிய இடங்களில் முஸ்லீம் மக்கள் பொன்னிறக் கதிர்களை வெட்டிக் குவிப்பதைக்கண்டு களித்தேன்.

சென்றவிடமெல்லாம் தமிழ்பேசும் மக்களனைவரிடமும் புது உணர்ச்சி யும் புது ஆர்வமும் தோன்றியது. தனிச்சிங்களம் சட்டமானதும் தமிழ் மக்களுக்கு முன்பு இராத உணர்ச்சியும் ஒற்றுமையும் தோன்றிற்று. தமிழ் பேசும் இனம் (Tamil Nation) என்னும் புத்துணர்ச்சி பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டேன்

எதிர்காலத்தில் தமிழ்மொழி செல்வாக்குடன் வளர்வதற்காகத்தமிழ் பேசும் மக்கள் சிறப்பாக வாழுத் மாவட்டங்களை நாம் இன்றே பல துறைகளிலும் சீர்திருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

நம் மாகாணங்களில் காடாகக் கிடக்குமிடங்களை நாடாக்குவது நம்முடைய கடமை. தென்மாகாணங்களில் செல்வமுள்ள தமிழர் வடமாகாணம் கீழ் மாகாணங்களில் நிலம் வேண்டி நெல், கரும்பு முதலிய பயிர்களை விளைத்து உழவுத் தொழிலும் தோட்டத் தொழிலும் சிறக்கச்செய்வதால் ஈழத் தமிழ் நாட்டில் பொருளியற் துறைகளில் நாம் முன்னேறுவதற்கு வழி வகைகளைக் காண்பர். தென் மாகாணங்களில் தங்க விருப்பமில்லாத தமிழர் ஒன்று சேர்ந்து வடமாகாணம் கீழ் மாகாணங்களில் புது நகர்களை அமைத்து ஈழத் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணை புரியக்கூடும். வடமாகாணம் கீழ் மாகாணங்களில் கூடிய விரைவில் தமிழ் மக்கள் குடியேறுவதும் நம் எதிர்கால நலன்களுக்கு இன்றியமையாதது.

ஆவது அறிந்து அறிவுரை வழங்கிய அடிகளார்க்கு தலைதாழ்த்தி வணக்கம் செலுத்துவோமாக.

— மா. க. ஈழவேந்தன்

M.K.EELAVENTHAN
FORMER MEMBER OF PARLIAMENT (SRILANKA
MEMBER OF TRANSNATIONAL GOVT.OF TAMIL EELAM
REPRESENTING CANADA
809-17 BRIMLEY ROAD , SCARBOROUGH. M1M 3T8, CANADA
TEL:416-519-7165
Email:mkeelaventhan15@gmail.com

**Father Thaninayagam was very conscious of the concept of a homeland for the Tamils**

This is a true translation of what Father Thaninayagam said in Tamil.

While I was delivering speeches regarding the economic and social advancement of the people of the Northern & Eastern provinces, I had the singular opportunity of sharing my thoughts with a good number of learned scholars. Also I felt that there is a dire need of realizing the future of the lands that lie in between Vavuniya & the Elephant pass.

I highly appreciated with a sense of great admiration the scenic beauty of the Koneshwara temple surrounded by attractive hills & waterfalls.

Also I was spell bound by the child like resemblance of the green paddy fields on either side of the Mahavali Ganga before it has its confluence in the ocean. I felt overjoyed when I witnessed the plentiful paddy harvest of our Muslim brothers who are living in the South of Batticaloa such as Karaithivu & Akkarai pattu.

Wherever I went I met Tamil speaking people with a fullness of enthusiasm and a feeling for the Tamil cause following the passing of the Sinhala only act. I witnessed a sense of unity and a strong renewed feeling for the Tamil Liberation cause .This feeling was not prevalent during the earlier period. I also witnessed that the Tamils were conscious that they are a nation.

I felt that there was a need to bring in radical changes in these districts for the betterment for the people in these areas. It is our duty to convert the forest areas into a convenient habitat. The rich Tamils living in the Southern areas of Srilanka should purchase lands in the Northern & Eastern provinces and cultivate paddy, sugarcane and other crops in our Tamil areas and economically make the areas prosperous.

The Tamils who do not want to live in the Southern areas must collectively get together and build model cities in the Tamil Eelam areas. Such efforts will bear fruit in numerous ways.

In essence shifting of the Tamil people towards Northern and Eastern Provinces- the traditional home land of the Tamils will go a long way to evolve a nation.

**Father Thaninayagam possessed a political foresight to what the future holds for the Tamils.** Let us salute our beloved Father for his vision

Date: May 27, 2013
M.K.Eelaventhan



# தமிழ் தவமிருந்து பெற்றளந்து தவத்திரு. தனிநாயக அடிகளை

**மா.க.ஈழவேந்தன்**

"முன்னைப் பழமைக்கும் பழமையதாய் பின்னைப் புதுமைக்கும் பேத்துமப் பெற்றியதாய் விளங்குபவன் இறைவன்". "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய் விளங்குபவனும் இறைவன்" என்று வான்கலந்த மணிவாசகர் தன் தேன்கலந்த திருவாசகத்தில் எங்கும் நிறைந்த இறைவனை எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கிறார்.

இறைவன் போன்றே எங்கு தோன்றியவள். எங்கு வளர்ந்தவள். எப்படி வளர்ந்தவள் என்று எடுத்துரைக்க முடியாதளவு தொன்மை மிக்கவள் எம் தமிழ்த் தாய். அவள்தாள் பணிந்து வாழ்வில் வளம் காண்போம் என்கிறார் பாட்டிற்கொரு புலவன் பாரதி.

சொற்பதம் கடந்த சோதியாய் விளங்குபவன் இறைவன். அவனை இன்ன தன்மையன் என்ன வண்ணத்தவன் என எடுத்துரைப்பது கடினம். அதுபோன்றே எங்கு தோன்றினாள் எப்படித்தோன்றினாள் என்று எடுத்துரைக்க முடியாதளவு தொன்மைமிக்கது தமிழ். காலத்தின் கருத் தோட்டத்திற்கு ஏற்ப பல்துறையில் வளம் பல கண்டு விளங்குகிறது தமிழ். கிரேக்கமும், இலத்தீனும், வட மொழியும் தொன்மை மிக்க மொழிகள் என்பதை யாம் மறுக்கவில்லை. ஆனால் இவை இப்பொழுது வாழ் விழந்த மொழிகளாக, வழக்காற்றில் இல்லாத மொழிகளாக செத்த மொழிகளாகவே கணிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றை மிஞ்சிய நம் தொன்மை மிக்க தமிழ் உயிர்த்துடிப்போடு எமக்கு உயிர் ஊட்டி உலகவலம் வருவது எமக்கு உவகை தரும் வரலாறாகும்.

ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது ஆங்கிலம். ஆனால் ஆங்கிலேயரின் படையெடுப்பின் விளைவாக இன்று ஆங்கிலம் அகில உலகை ஆள்கிறது. ஆங்கிலம் வளர்ச்சியுறுவதற்கு முன் ஐரோப்பாவை ஆண்டது பிரெஞ்சு மொழி."Lingua Franca" என்ற பெயர் தாங்கி வளமான மொழியாக வையத்தை ஆண்டதை நாம் மறுக்க வில்லை.

ஆங்கிலம் இன்று உலகப் பண்பாட்டின் பலகணி "Window to world culture" என்று பகரும் அளவிற்கு பரந்து விரிந்துள் ளதை நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஏற்றேயாக வேண்டும்.

ஆனால் ஆங்கிலத்தின் வளர்ச்சியைப் பற்றி அறிஞர்கள் குறிப்பிடுகையில் கடன் பெற்று வளம் பெற்ற மொழி ஆங்கிலம் (English has enriched itself by borrowing) என்று மொழி வர். உலக மொழிகளின் கலப்பிற்தான் உருவாகியது ஆங்கிலம், கிரேக்கம், இலத் தீன், கீபுறு, சீனம், அரேபியம், தமிழ் என்று எண்ணற்ற மொழிகளின் கூட்டு மொத்தம் தான் ஆங்கிலம். கட்டுமரம், அணைக்கட்டு, கலம், கறி அரிசி என்று எண்ணற்ற தமிழ்ச்சொற்கள் ஆங்கிலத்திற்கு வளம் ஊட்டியுள்ளன. எந்த மொழியும் வளர்ச்சி பெறும் போது கடன் பெறுவது தவிர்க்க முடியாதென்பதை யாம் மறுக்கவில்லை. ஆனால் தன் மொழியின் வேர் அறுபடுகின்ற அளவிற்கு வேரின் தன்மை எதுவென்று தெரியாதள விற்கு ஆங்கிலம் உருமாற்றம் பெற்றுள் ளதைஅறிஞர உலகம் ஏற்றுள்ளது. இதனாற்தான் "Basic English movement" அடிப்படை ஆங்கில இயக்கம் ஆங்கில அறிஞர்களிடம் உருவாகியது. ரி.எஸ். எலியட் (T.S. Elliot) என்ற ஆங்கில இலக்கியத்திறன் ஆய்வா ளர், செகப்பிரியர் கூட எல்லை மீறியளவிற்கு ஆங்கிலத்தின் தனித்துவத்தை இழக்கச் செய்துள்ளார் என்று கூறிய கூற்று இன்று எமக்கு நினை விற்கு வருகிறது.

ஆனால் ஆங்கிலத்தோடும் ஏனைய மொழிகளோடும் தமிழை ஒப்பிடும்போது **"தனிமைச் சுவையுள்ள சொல்லை தமிழில் அன்றி வேறு ஒன்றில் யாம் கண்டதில்லை"** என்று பாரதி பாடிய பாடலை யாம் எளிதில் மறக்க முடியது.

தனித்தமிழ் இயக்கம் கண்ட சுவாமி வேதா சலம் தன்பெயரையே மறைமலையடிகள் என மாற்றி எல்லை மீறிய நிலையில் தமிழில் பிற மொழிச் சொற்கள் குறிப்பாக வட மொழிச் சொற்கள் தமிழிற் புகுந்து தமிழின் உருவத்தை — வடிவத்தை — தனித்து வத்தை மாற்றும் நிலை உருவாகியபோது அவற்றைத் தடுத்து நிறுத்திய பெருமை அடிகளாரையே சாரும். தமிழைத் தமிழாக தமிழனைத் தமிழனாக வாழவைத்த பெருமை அடிகளாற்கே உண்டு. அடிகளா ரின் செங்குருதி சிந்தாத புரட்சி தமிழ் மொழியின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. திராவிட மொழிகளின் ஒப்புவமை (Comporative study of the Dravidian languages) என்று முனைவர் கால்ட்வெல் (Dr. Caldwell) எழுதிய வரலாற்று முதன்மை வாய்ந்த ஆய்வுகள் அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்திற்கு வலுச் சேர்த்தது. முனைவர் கால்ட்வெல் தன்நூலில் மொழிந்தவை இதோ.

Tamil can readily dispense with the greater part or whole dispensing with it rises to a purer and more refined style whereas English cannot abandon its Latin without abandoning its perspicuity" தமிழ் வடமொழியைப் பெருமளவு அல்லாமல் முழுமையாக நீக்கி தூய்மையான தெளிந்த நடையைக் கையாள முடியும். ஆனால் ஆங்கிலமோ இலத்தினை நீக்கின் தெளி வான சொல்லாட்சியைப் பெற முடியாது என்று கூறியிருப்பது எம் அறிவுக் கண் ணைத் திறக்க உதவட்டும்.

மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத் தின் விளைவுதான் இன்று சபை அகற்றப் பட்டு அவை அல்லது மன்றம் நடமாடும் சொல்லாக விளங்குகின்றது. இன்று அக்கிர சனர் அகற்றப்பட்டுள்ளார். தலைவர் தலை மை தாங்குகின்றார். காரியதரிசியைக் காணவில்லை. செயலாளர் செம்மையோடு வீற்றிருக்கின்றார். பொக்கிசாளர் புதைக்கப் பட்டுள்ளார். பொருளாளர் பொலிவோடு வீற்றிருக்கிறார். போஷகர் போன இடம் தெரியாது. ஆனால் காப்பாளர் கனிவோடு காட்சியளிக்கிறார். இப்படி தமிழில் ஏற்பட்ட எத்தனையோ மாற்றங்களை விரிக்கலாம். எனினும் விரிவஞ்சி விடுத்தாம்.

**இன்பத் தமிழால் இறைவனைப் பாடுவோம்:**

இன்பத் தமிழால் இறைவனைப் பாடி அன்பைப் பெருக்குவோம் என்று யாம் கூறும் நிலையிலும் தமிழன் கட்டிய கோயில்களில் தமிழில் வழிபாடு இல்லை. ஒரு விழுக் காடும் இல்லாத பார்ப்பனர் தமிழரை மூளைச் சலவை செய்ததின் விளைவு எம் கோவில்களில் வடமொழியின் வல்லாண்மை தலை தூக்கியுள்ளது.

“எங்கே தமிழின் நீர்மை பேசப்படுகின்றதோ அங்கே இறைவனைக் காண்கின்றேன்” என்று கூறிய தமிழ் ஞான சம்பந்தன் ஐம்பது இடங்களில் தன்னை தமிழ்ஞான சம்பந்தன் என்று முழங்கி ஐந்நூறு இடங்களில் தமிழின் பெருமை பேசிய நிலையிலும் எம்கோவில்களில் தமிழுக்கு இடமில்லை. மாறாக எம் கோவில் படிக் கட்டுக்களின் கீழ் நின்று தமிழ் மானத்தை வடிகட்டி விற்று வடமொழியை மந்திரம் என்று உவக்கும் மடையர்களாகக் காட்சி அளிக்கின்றோம். “தமிழன் செருப்பாக மாற்றப்பட்டும் நெருப்பாக மாற மறுக்கின் றோம். ஊறிய அடிமை உணர்வின் விளைவு இது.

“தமிழோடு இசைபாட மறந்தறியேன்” என்று திருநாவுக்கரசர் நயம்பட உரைத்தும் நமது தமிழ்க் கோவில்களில் தெற்கோதும் தேவாரத்திற்குப் பதில் சகத் திருநாமம் சதிநோக் கோடு நம் கோவில்களில் புகுந்து நம்மை ஆட்டிப் படைக்கின்றது. நம்மை மண்மேல் சொற்றமிழ் பாடுகவென தம்பிரான் தோழருக்கு நம்பியாரூரனுக்கு எட்டாம் நூற்றாண்டிலேயே இறைவன் கட்டளையிட்ட நிலையிலும் கடவுளுக்குத் தமிழ் தெரியுமா என்று கேட்கும் கேடுகெட்ட தமிழன் இன்னும் தமிழரிடையே வாழ்வது எமது சாபக்கேடாகும்.

“சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து பாடுகவென” ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகம் தந்த மணிவாசகர் எம்மை வேண்டிய நிலையிலும் குருடும் குருடும் குருடாட்டமாடி குழிவிழும் நிலையிலேயே தமிழன் தனக்கு குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்றான்.

**தனிநாயக அடிகளார் தன் படைப்பின் நோக்கம் பற்றி விளக்கும் பாங்கு:**

எமது நாயன்மார்கள் காட்டிய நற்றமிழ் நெறிகளைக் கடைப்பிடித்த நம் தனிநாயக அடிகளார் தான் உரை நிகழ்த்திய அவைகளில் அனைத்திலும் “என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு” என்ற திருமூலர் திருமந்திரத்தை அவர் தனக்கேயுரிய நடையில் உச்சரிக்கின்ற போது நாம் எல்லை மீறிய நிலையில் உவகையில் மூழ்கின்றோம்.

உலக மொழிகள் பலவற்றிலும் கரைகண்ட நம்மடிகளார் ஒவ்வொரு மொழியின் சிறப்பினையும் செப்பிடத் தயங்கவில்லை. ஆனால் தமிழே இறை அன்பிற்குரிய பக்திக்குரிய மொழி என்பதை அவர் பின்வரும் முறையில் எடுத்துரைக்கின்றார். “ஆங்கிலத்தை வாணிபத்தின் மொழி என்றால் பிரெஞ்சு தூதின் மொழியாகும். இலத்தின் சட்டத்தின் மொழி என்றால் சேர்மன் தத்துவத்தின் மொழியாகும். இத்தாலி காதல் மொழி என்றால் தமிழே பக்தியின் மொழியாகும். தமிழில் இரங்குவது போல வேறு எந்த மொழியுலும் இரங்க முடியாது” என்பது அடிகளாரின் முடிந்த முடிபாகும்.

“செந்தமிழ் உடல் சிவநெறி உயிர்” என்கின்ற சிவநெறி தழுவி நிற்கின்ற செந்தமிழன் தான் கட்டிய திராவிட சிற்பம்- திராவிட ஓவியம் - திராவிட கட்டடக் கலை கொண்ட கோவில்களில் செந்தமிழ் ஓங்கவில்லை. மாறாக “ஓம் சுக்கிலாம் நெய்வேத்தியம்” என்ற புரிய முடியாத வாழ்விழந்த வடமொழியே தலைதூக்கியுள்ளது. தன்னைத் தான் தாழ்த்துவதற்கு தமிழனுக்கு நிகர் எவரும் இல்லை போலும்.

தமிழகத்திற்கு வந்தேறு மதம் என்று கூறப்படும் கிறித்துவ கோவில்களில் முதலில் கீபுறு ஒலித்தது.பின்பு இலத்தீன் தலைதூக்கியது. அடுத்து ஆங்கிலம் ஆட்சி செய்தது. பின்பு **“பரம மண்டலத்தில் உள்ள பிதாவே எம்மை இரட்சித்தருளும”** என்ற வடமொழி கலந்த தமிழ் வாழ்வு பெற்றது. ஆனால் இன்றோ கிறித்தவக் கோவில்களில் விண்ணுலகில் வீற்றிருக்கும் இறைவன் எம்மை ஆட்சி கொண்டருளும் என்ற தூயதமிழ் எங்கும் ஒலிக்கிறது.

தமிழ்த்திரு. துனிநாயக அடிகளார் ஏற்படுத்திய தாக்கம்- ஈட்டிய வெற்றி இதுவென்பதை யார்தான் மறுக்கமுடியும்.

26வது அகவையில் இறையியற் கல்லூரியில் பயில்கின்ற காலத்திலேயே தன்னை மிஞ்சிய நிலையில் உலக மொழிகள் பலவற்றைப் பயின்ற நிலையிலும் தமிழ்மீது அவருக்குத் தணியாத தனிக்காதல் ஏற்பட்டிருந்தது. தமிழுக்கு உலக அரங்கில் உரிய இடமில்லை. இதனை மாற்றியே ஆக வேண்டும் என்ற உறுதி அவர் உள்ளத் தில் அன்றே குடி கொண்டு விட்டது. சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையின் தாய் சொர்ண அம்பாள் நினைவுச் சொற்பொழி வினை சென்னைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் நிகழ்த்திய போதே இவ்வெண்ணங்கள் அவர் உள்ளத்தில் எதிரொலித்ததை அவரின் உரை உணர்த்தி நின்றது. 1966ல் கொங்கொங்கிலிருந்து வெளிவந்த Eastern Horizon என்ற வெளியீட்டில் Tamil deserved special notice as the only Indian language whose literary life both ancient and modern period he also wanted to pull Tamil out from under the shadow of Sanskrit என்ற அவரின் ஆழமிக்க சொற்கள் அவரின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

தமிழ் பண்பாட்டின் உயிர்மூச்சாய் விளங்குவது தமிழில் எழுந்துள்ள இலக்கியம். மெய்யியல், சமயம், பல்துறைச் சிறப்பு தமிழில் குடிகொண்டிருந்தபோதும் உலகம் உரிய முறையில் தமிழைப் போற்றவில்லை என்பதை உணர்ந்திருந்த அடிகளார் தமிழின் தூதுவராகத் துலங்கி துடிப்போடு தமிழுக்கும்- தமிழனுக்கும் ஆற்றிய பணி வையக வரலாற்றில் தனி அடம் பெறுகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் குறிப்பாகத் தாயகத்தில் தமிழால் உலகாண்ட தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாவை 02-08-2013ல் கோலாகலமாகக் கொண்டாடுவதில் பெருமிதமும் பேருவகையும் கொள் கின்றது.

தமிழின் தனிநாயகமாகவிளங்கியவர் நம்தனிநாயக அடிகளார். அவர் அனைத்தையும் தமிழிற் காணவிழைந்தவர். தமிழும் தமிழன் வாழ்வும் தமிழ்மயமாய் விளங்கியிருந்தால் தமிழனுக்கு வாழ்வுண்டு.-இதுவே தனிநாயக அடிகளின் தீராத காதல்-விடுதல்-அறியா விருப்பம்.. தமிழனைத் தமிழன் போற்றின் தாரணி தமிழனைப் போற்றும்.-எனவே எல்லாம் தமிழிற் செய்வதே எம் வாழ்வாம். தமிழைக் காப்போம். வாரீர்" என்பது தனிநாயக அடிகளாரின் தாரக மந்திரமாக-மறைமொழி யாக விளங்கியது.

தமிழகப் புலவர் புத்தனேரி சுப்பிரமணியம் எம் அடிகளாரின் அருந்தமிழ் உணர்வை பின்வரும் வரிகளில் மொழிகிறார்.

"மன்பதையெல்லாம் தமிழ்மொழியாய்
வாழ வேண்டும்
மல்குபெயர் செந்தமிழாய் மலர வேண்டும்
அன்பகமாய்த் தமிழரெல்லாம் தமிழ்
அணிந்து
அங்காடித் தெருப்பெயர்கள் தமிழேயாகி
இன்பநிழற் பூஞ்சோலை கல்விச் சாலை
இயல் இசை நாடக மேடை
கோயிலெல்லாம் தென்தமிழே
நடம்புரியத்தமிழர் ஆட்சியெனத்
திகழ்வதென்றோ?

என அவர் விடுக்கும் வினாவிற்கு விடையாக இன்றே தமிழர் ஆட்சி செந்தமிழின் ஆட்சியென விளங்க வழிகாண்போமாக! இதுவே தமிழால் உலகாண்ட தனிநாயக அடிகளாருக்கு நாம் செய்யும் தலையாய கைமாறு.

மா.க.ஈழவேந்தன்

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்- இலங்கை